ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस்து नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஹு தை-மீ 26உ 1940 ஹு பிப்ரவரி-மீ 8உ. | வ-6

குடந்தை ஓர் ஆஸ்திகரின் மரணம்

குடந்தை சோலையப்பமுதலித்தெருவில் வெகு காலமாய் அமைந்திருக்கும் ஸ்ரீராம பஜனை மடத்து அதிகாரியும் பாடல் இயற்றுவதில் மிகவும் தேர்ச்சியுள்ளவரும் ஸங்கீத வித்வானும் பிரபல ஸனுதனியுமான ஸ்ரீமான் கண்ணன் அய்யங்கார் என்பவர் தமது 62 வயதில் அவரது இல்லத்தில் காலமானதை குறித்து வருந்துகிறோம். ஷை மடத்தை விடாமல் நடத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். (ஓ. கி.)

காந்தி படத்திற்கு அவமரியாதை?

வைத்ததை எடுத்துவிட முடிவு

குடந்தை காங்கிரஸ் கௌன்ஸிலர்களின் பயம்?

குடந்தையிலுள்ள முனிஸிபல் பள்ளிக்கூடங்களில் காந்தி படத்தை வைப்பதென்று ஏற்கனவே காங்கிரஸ் கௌன்ஸிலர்கள் தீர்மானித்தபடி எல்லா பள்ளிகளிலும் காந்தி படம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனல் மகமதியப்பள்ளிக்கூடங்களில் அந்தப்படத்தை வைப்பதை மஹம்மதியர்கள் ஆக்ஷேபிக்கிருர்களாம். ஆதலால் 27உ யன்று கூடிய முனிஸிபல் கூட்டத்தில் காங்கிரஸ் கௌன்ஸிலர் டாக்டர் மஹாலிங்கத்தின் பிரேரேபணையின்படி மஹம்மதியப்பள்ளிக்கூடங்களில்உள்ள காந்திபடங்களைஎடுத்துவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. இது காந்தி படத்தை அவமதிப்பதாகுமென்று காங்கிரஸ் கௌன்ஸிலர்களிலேயே சிலரும், பொது ஜனங்களும், நினைக்கிருர்களாம்!

நிலவரி வஜா இல்லையாம்!

தஞ்சை ஜில்லா போர்ட் காங்கிரஸ் மெம்பர்களின் தீர்மானம்

இப்போதுள்ள சென்னை கவர்ன்மெண்டார் இவ்வருஷத்திலும் 75லக்ஷம் ரூ நிலவரி வஜாசெய்ய நிச்சயத்திருப்பதை அநுஸரித்து தஞ்ஜை ஜில்லாபோர்டுக்குள்பட்ட விடங்களிலும் அந்தமாதிரி வஜாசெய்ய வேண்டுமென்று கலெக்டரிடமிருந்து வந்த கடிதத்தின் மீது [illegible] அப்போர்ட்டார் கூடி பணநிலைமை ஸரியாயில்லாத காரணத்தால் இவ்வருஷம் வரிவஜா செய்யமுடியாதென்று தீர்மானித்தார்கள். ஆனல் சென்னை காங்கிரஸ் மாளிகை புதிப்பிப்பதற்குமட்டும் 500ரூபாய் போர்டிலிருந்து கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தஞ்ஜை ஜில்லாபோர்டில் காங்கிரஸ் மெஜாரிடியிருப்பது தெரிந்த விஷயம்.

வங்காளக் கமிட்டியின் வீரத்தனம்

வங்காள காங்கிரஸ் கமிட்டித்தகராறுகளைவிசாரிக்கக் கார்யகமிட்டியானது அட்ஹாக் கமிட்டியை நியமித்திருந்தது. ஆயினும் வங்ககமிட்டியானது அத்துடன் ஒத்துழைப்பதில்லையென முடிவு செய்துவிட்டது. இதன்மேல் அட்ஹாக் கமிட்டிவேலைசெய்ய முடியாமல் போய்விட்டதால்அதை கலைத்துவிட்டார் காங்கிரஸ்தலைவர்.

கோவில் கோபுரத்தில் காங்கிரஸ் கொடியா?

எடுத்து விடும்படி வற்புறுத்தல்,

கோவில் முன் ஸத்யாக்ரஹம்.

மதுரை மீனுக்ஷி கோவில் கோபுரத்தின் மீது பறக்கவிடப்பட்டிருக்கும் காங்கிரஸ் கொடியை உடனே எடுத்துவிட வேணுமென்றும், அது ஹிந்து ஸமூஹத்தினரின் மனதைப் புண்படுத்துவதாயும் மீனுக்ஷி ஹிந்து தர்ம ஸேவா ஸங்கத்தாரின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பரங்குன்றம் கோவிலுக்கு மதுரை மீனுக்ஷியம்மனை ஸம்புரோக்ஷணைசெய்யாமல் கொண்டுபோகக்கூடாதென்றும், அப்படிச் செய்தால் கோவில் வாசலில் ஸத்யாக்ரஹம் நடத்த வேணுமென்றும் மேற்படி ஸங்கத்தாரால் முடிவு செயயப்பட்டிருக்கிறது.

குழந்தைகளுக்கு கட்டி முதலியரோகங்கள் பலவிதசெயற்கை ஆகாரத்தினுல்தான்.
சிறு குழந்தைகளுக்கு தாய் பால் தான் இயற்கையான உத்தம உணவு.

पयस्या. PAYASYA [Regd.] பயஸ்யா

தாயின் பாலை மிகுதியாக வளர்க்கிறது.

கிடைக்குமிடம் :—ஆத்ரேய ஆயுர்வேத சாலா.
தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.

விலை. ¼ பவுண்டு 1—6—0.
½ பவுண்டு 2—8—0.
(Packing & Postage extra.)

திறமைவாய்ந்த எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கு, டாக்டர் கோஷியே.

பற்பொடிகளில் சிறந்தது கிரூஸ்லீட் பற்பொடி ஒன்றே.

கிரூஸ்லீட் பல் ஆஸ்பத்ரி, ரெயில்வேஸ்டேஷன் எதிரில், கும்பகோணம்.

ராஜாங்கம் அண்ணவையர்

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர்
எழுதியது.

(சென்றவாரதொடர்ச்சி)

அரசர் அவ்வந்தணரோடு பேசிக் கொண்டிருந்த போதே அவருடைய மனத்துள் ஒரு போராட்டம் நிகழ்ந்தது. வடநாட்டு வீரரை ஜயிப்பவரில்லையே என்று வருந்தியிருந்த அரசருக்கு அண்ணவையருடைய தோற்றமும் பேச்சும் ஒரு புதிய நம்பிக்கையை உண்டாக்கின. அவர், தாம் மல் யுத்தம் செய்வதாகக் கூறவே அரசருக்கு அந்நம்பிக்கை உறுதிபெற்றது. ஆயினும், 'இவர் உண்மையில் ஜயிப்பாரா?' என்ற சந்தேகமும், 'இவர் தோல்வியுற்று ஏதேனும் துன்பத்தை அடைந்தால் சாதுவான ஒரு பிராமணரைக் கஷ்டப்படுத்தின அபவாதம் வந்தால் என் செய்வது!' என்ற அச்சமும் இடையிடையே எழுந்தன.

அரசர்:— அவன் நல்ல மாமிச போஜனம் செய்பவன்; பலசாலி; பல நாள் பழக்கமுள்ளவன். அவனை ஜயிப்பதாக நீர் கூறுகின்றீரே; உம்மிடம் என்ன பலம் இருக்கிறது?

அண்ண: நான் சுத்தமான உணவுகளை உட்கொள்ளுபவன். எனக்கும் மல்வித்தையில் அப்யாஸம் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலான பலம் ஒன்று என்னிடம் இருக்கிறது.

"என்ன அது?" என்று அரசர் மிகவும் ஆவலோடு கேட்டார்.

"நாங்களெல்லாம் ஈசுவராராதனம் செய்பவர்கள். ஈசுவர நிவேதன அன்னத்தையே சாப்பிடுகிறவர்கள். எங்களுடைய உடம்புக்கு அந்தப் பிரசாதம் பலத்தை உண்டாக்குகின்றது. பரமேசுவரனது கிருபையாகிய பலம் எங்களுக்கு உண்டு. அதைக்காட்டிலும் வேறு பலம் என்ன வேண்டும்?"

அரசருக்குக் கண்களில் நீர் துளித்தது. மகாராஷ்டிர அரசர்கள் மிக்க பலசாலிகள்; மிகவும் சிறந்த சிவபக்தர்கள். ஆதலின் பலசாலிகளிடத்தும் சிவபக்தர்களிடத்தும் அவர்களுக்கு அபிமானம் இருந்துவந்தது. இருவகை இயல்பும் ஒருங்கே காணப்படுமானல் அவர்களுடைய அன்பு அங்கே பதிவதற்கும் ஐயமுண்டோ?

"வாஸ்தவம். நீங்கள் அந்தப் பலத்தை உடையவர்களானல் ஜயிப்பீர்கள். அடுத்தபடியாக நீங்கள் அவனேடு போர் புரிந்து இந்த ஸம்ஸ்தானத்தின் புகழை நிலை நாட்டுங்கள்" என்று அரசர் சொன்னர். அவ்வந்தணர்பால் அவருக்கு அதிக மதிப்பு உண்டாகிவிட்டது.

அண்ணவையருக்கும் வடநாட்டு மல்லருக்கும் போராட்டம் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்யப்பட்டன. அண்ணவையர் விளையாட்டு வாடி (வளைவு) க்குள் சென்றார். மல்லரோ பலரை வென்றேமென்ற இறுமாப்பினல் வருபவர் ஒரு பிராமணரென்ற அசட்டையினலும் துள்ளிக் குதித்தார். உடுப்போ, ஆயுதமோ ஒன்றும் இல்லாமல் அவர் வருவதைப் பார்த்தபோது மல்லருக்கு அவரிடம் அலக்ஷ்ய புத்தி தான் ஏற்பட்டது. தம் மீசையை முறுக்கிக் கொண்டார்; தோளைத் தட்டினர்; தொடையையும் தட்டினர்.

அண்ணவையர் அங்கே சென்று தம் வஸ்திரத்தின் முன் பகுதியை அப்படியே எடுத்து முழங்காலுக்குமேல் நிற்கும்படி பின்பக்கத்தில் இறுகச்செருகிக்கொண்டார். மேல் வஸ்திரம் கையைத் தடுக்காதவாறு மார்பின் இரண்டு பக்கமும் குறுக்கே செல்லும்படி போர்த்து முதுகில் முடிந்து கொண்டார். இந்தக் கோலத்தில் வடநாட்டு வீரர் முன் மிகவும் அமைதியோடு நின்றார்.

மல்லர் ஆரவாரம் செய்துகொண்டு வேகமாக ஓடிவந்து வஜ்ரமுஷ்டியணிந்த தம் வலக்கையை அவருடைய இடப்பக்கத்தில் குத்தினர். அந்தக் குத்துத் தம்மேல் படுவதற்குமுன் அக்கையை அப்படியே தம் இடக்கையால் அண்ணவையர் பற்றிக் கொண்டார். மல்லர் வலப்பக்க விலாவில் இடக்கையை கொடுத்து அவரைத்தள்ள முயன்று கையை நீட்டினர். அந்தக்கையை அண்ணவையர் தம் கட்கத்தில் இறுகச் சிக்கவைத்துக் கொண்டார். இரண்டு கைகளையும் அவர் பற்றிக்கொள்ளவே மல்லர் தம் வலக்கையை இழுத்து மீண்டும் குத்த எண்ணினர். கை வந்தால் தானே மேலே போராடலாம்?

கைகளை அவரால் இழுக்க முடியவில்லை. அண்ணவையர் வரவர அதிகமாக இருக்கலானர். கைகள் நசுக்குண்டன. மல்லருக்கோ கையை எடுக்க முடியாததோடு வரவர வேதனையும் அதிகமாகிவிட்டது; வலி பொறுக்க முடியவில்லை. தம்மால் ஆனவரையும் திமிரிப் பார்த்தார். ஒன்றும் பலிக்கவில்லை.

"இன்றேடு நம்முடைய அகம்பாவம் ஒழிந்துபோம்" என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டார். அழாக்குறையாக அந்தணர் முகத்தைப் பார்த்தார்.

"ஏன், சும்மா நிற்கிறீர்? விளையாடுகிறது தானே? என்று அண்ணவையர் கேட்டார்.

மல்லர் என்ன சொல்வார்! மெல்ல "என்னை விட்டு விடுங்கள்" என்றார்.

"ஏன்! விளையாடவில்லையோ?" என்று அண்ணவையர் கேட்டார்.

மல்லர்: உங்கள் பெருமை தெரியாமல் அகப்பட்டுக் கொண்டேன். என்னை விட்டு விடுங்கள்.

அண்ண: நீங்கள் தோல்வியுற்றதாக ஒப்புக்கொள்வீரா?

மல்லர்: அதற்கென்ன தடை? அப்படியே ஒப்புக்கொள்வேன்; என்னை இப்போது விட்டுவிட்டால் போதும்.

அண்ண: இப்போது கையை விட்டுவிடுகிறேன். மறுபடியும் விளையாடலாமா?

மல்லர், முடியவே முடியாது. உங்களோடு விளையாடுவதாக இனிமேல் கனவிலும் நினைக்கமாட்டேன்.

அண்ண: மகாராஜாவிடம் உம்முடைய தோல்வியை ஒப்புக்கொள்வீரா?

மல்லர்: அப்படியே செய்கிறேன்.

அவ்வளவு நாட்களாகப் பலரை வென்ற மல்லர் அந்தப் பிராமணரோடு போராடாமலே தோற்றுப்போனதைப் பார்த்தபோது ஜனங்கள் பிரமித்து நின்றனர். "என்ன ஆச்சரியம்! இந்தப் பிராமணர் கையை அசைக்கக்கூடவில்லை. அவன் சரணுகதி யடைந்து விட்டானே!" என்று யாவரும் வியந்தனர்.

அரசருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவு ஏது? இருவரும் அரசரால் அழைக்கப்பட்டனர். அவரிடம் சென்ற மல்லர் தலை கவிழ்ந்துகொண்டே, "உங்கள் ஸம்ஸ்தானத்திலே தான் நான் தோல்வியுற்றேன்" என்று கூறினர்.

அரசர் அவருடைய நெஞ்சத்துள் உண்டாகும் துக்கத்தை ஒருவாறு உணர்ந்து, "தோல்வியும் வெற்றியும் மாறி மாறித்தானே வருகின்றன? எல்லாவற்றிற்கும் மேலே ஈசுவர கடாட்சம் இருக்கிறது. அதுதான் இன்று ஜயித்தது. எங்கள் நாட்டின் பெருமை உமது மூலமாக வெளிப்பட்டது" என்று ஒருவாறு சமாதானம்கூறி அவருக்கு நல்ல ஸம்மானங்கள் செய்தார்.

தம்முடைய ஸம்ஸ்தானத்தின் மானத்தைக் காப்பாற்றிய அண்ணவையரை வாயாரப் பாராட்டி, "எல்லாம் பரமேசுவரன் செயலென்று இன்று உங்களால் நன்ருக அறிந்துகொண்டேன். நீங்கள் இந்தராஜாங்கத்துக்கு மிகவும் அவசியமானவர்கள். இன்று முதல் ராஜாங்கத்தைச் சேர்ந்தவர்களாகிவிட்டீர்கள்" என்று மனமுவந்து பாராட்டிப் பலவகைப் பரிசுகளையும் வழங்கினர். அதுமுதல் அவர் பெயர் ராஜாங்கம் அண்ணவையர் என்று வழங்கலாயிற்று.

ஸம்மானங்களைப் பெற்றுக்கொண்ட மல்லரும் அண்ணவையரும் அங்கே சிலநாள் இருந்தனர். அப்பால் அரசரிடம் இருவரும் விடைபெற்றுக்கொண்டபோது மல்லர் அரசரைப்பார்த்து, "ஒரு பிரார்த்தனை" என்றார்.

"என்ன?" என்று கேட்டார் அரசர்.

"இவ்வளவு பலம் பொருந்திய இந்தப் பிராம்மண சிரேஷ்டருடைய ஊரையும் உறவினர்களையும் பார்க்கவேண்டுமென்ற ஆசை உண்டாகிறது. அதை நிறைவேற்றிக் கொள்ளும்படி உத்திரவாகவேண்டும்" என்று மல்லர் வேண்டிக்கொண்டார்.

"அப்படியே செய்யலாமே" என்று அரசர் உத்திரவிட்டார்.

மல்லரும் அவருடன் வந்த இருபது பேர்களும் அண்ணவையருடன் மாங்குடி சென்றனர். போன சமயம் காலைவேளை. இவர்கள் வரவை அண்ணவையர் முன்னதாகவே தெரிவித்து அவர்கள் யாவருக்கும் பழையது ஸித்தம் செய்துவைக்கும்படி சொல்லியனுப்பி யிருந்தார். அப்படியே வீட்டிலுள்ளவர்கள் முன்னதாகவே நிறைய அன்னம் வடித்து நீர்ற் போட்டிருந்தார்கள்.

"உங்களுக்கு இவ்வளவு பலம் எப்படி வந்தது? நீங்கள் என்ன சாப்பிடுவீர்கள்?" என்று மல்லர் கேட்டார்.

"நாங்கள் காலையில் சாத்தீர்த்தத்துடன் பழையது சாப்பிடுவோம். இன்று அது கிடைக்கும் என்றார் அண்ணவையர்.

வந்தவர்களுக்கெல்லாம் இலைகள் போடப்பட்டன. உப்பும், மாங்காய், நாரத்தங்காய், இஞ்சி முதலிய ஊறுகாய்களும், பழங்கறிகளும் பரிமாறப்பட்டன. அப்பால் பழையதைப் பரிமாறினர்கள். பிறகு ஒருவர் ஊறின எள்ளைக் கொணர்ந்து ஒவ்வோர் இலையிலும் ஒரு கைப்பிடி எடுத்து வைத்துச் சென்றார்.

வந்தவர்கள் சாதத்தைப்பிசைந்துகொண்டார்கள். ஊறுகாயையும் சுவைத்துப்பார்த்தார்கள். "இந்த எள்ளை என்ன செய்வது?" என்பது அவர்களுக்கு விளங்கவில்லை ஒருவரை யொருவர் பார்த்து விழித்தார்கள். தலைவராகிய மல்லர் அண்ணவையரைப்பார்த்து 'இதை என்ன செய்வது?" என்று கேட்டார்.

"அதுதானே உடம்புக்குப் பலம்? அப்படியே எடுத்துச் சாதத்தில் பிழிந்துகொண்டால் எண்ணெய் வரும். இந்தப்பழையதும் எண்ணெயும் சேர்ந்தால் நரம்புக்கு அதிக வன்மையுண்டாகும்."

விருந்தினர்கள் எள்ளையெடுத்துப் பிழிந்தார்கள். ஊறின ஜலந்தான் வந்ததேயொழிய எண்ணெய் வரவில்லை; அதற்குரிய பலம் அவர்களிடம் இல்லை. மல்லர் தலைவரால் கூட முடியவில்லை. இதைப் பார்த்துக் கொண்டேயிருந்த அண்ணவையர் அங்கே நின்ற இளைஞன் ஒருவனைப்பார்த்து, "அடே இந்த எள்ளைப்பிழிந்து வை" என்று கட்டளையிட்டார். அவன் ஒவ்வோர் இலையிலும் இருந்த எள்ளை எடுத்து அப்படியப்படியே சாதத்தில் பிழிந்து செல்வதைப் பார்த்த

(தொடர்ச்சி 3 பக்கம் பார்க்க)

ஸத்ஸங்க மஹிமை.
ஒரு கதை.

(எஸ். கே. விச்வேச்வர சாஸ்திரிகள்)

பக்தியில் சிறந்தவரான நாரதர், கிருஷ்ண பரமாத்மாவைத் தரிசிக்க துவாரகை வந்தார். பகவான் அவரை மனப்பூர்வமாய் வரவேற்றுத் தன் சிம்மாசனத்தில் உட்காரக் கேட்டுக் கொண்டார். மகரிஷி ஆசனத்தில் அமர, கிருஷ்ணன் அவரைப் பின் கண்ட விதம் குசலப்ரச்னம் செய்தார். மகரிஷே! தாங்கள் த்ரிலோக சஞ்சாரியல்லவா. இந்த உலகங்களில் எல்லாரும் சௌக்கியமாயிருக்கிறார்களா? எங்கேயாவது ஏதாவது விசேஷம் உண்டா? தயவு செய்து செல்லுங்கள் என்று கேட்டார் கிருஷ்ணன். அதற்கு பதில்சொல்லிமுடித்து, பகவானே! நான் இவ்விடமிருந்தே பல தடவைகளில் ஸத்ஸங்கத்தின் மேன்மை அதிகமென்றும் ஒருவன் ஆத்மா கடைத்தேற, அதுதான் முக்யமென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். த்ருவன், ப்ரஹலாதர், சிபி, பலி இவர்கள் சரித்திரங்களை தேவரீரே செல்லியிருக்கிறீர். இருந்தாலும் என் ஆத்ம லாபத்திற்காக, ஸத்ஸங்கத்தைப்பற்றி நன்றாய்க் சொல்லி அருள்புரிய வேண்டும் என்று நாரதர் கேட்டார்.

மகரிஷே! உம்முடைய இந்தக் கேள்வியால் மிகவும் சந்தேஷமடைந்தேன். ஸத்ஸங்கமில்லாமல் என்னை வந்தடைந்தவர் ஒருவருமில்லை. ஆதால் இந்த அரிய விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தகுந்தவர், தங்களைத்தவிர வேறு ஒருவருமில்லை. உமக்குச் சொன்னால்தான் இவ்விஷயம் நன்றாய் மூவுலகிலும் பரவும். இதை இப்போதே உமக்குத் தெரியச் செய்கிறேன்.

ஐந்துமயிலுக்கப்பால், நேர் கிழக்கே ஒரு தோட்டம் இருக்கிறது. அதில் ஒரே ஒரு குட்டைத் தென்னை மரம் உண்டு. அது இரு கிளைவிட்டு வளர்ந்தும் இருக்கிறது. அந்த மரத்தைக் கேட்டால் சொல்லும். தயவு செய்து போய்த் தெரிந்து வாரும் என்று கிருஷ்ணன் சொல்லவே, நாரதர் அந்தத் திக்கை நோக்கி நடக்கலானார், அத்தோட்டத்தில், குறித்த மரத்தின் கீழ் நின்று, பூலோக கற்பக விருட்சமே! தென்னை மரமே! ஸத்ஸங்கத்தின் மகிமை இன்னதென்றுசொல்ல வேண்டும் என்றார் நாரதர். இவ்வார்த்தைகள் வெளி வந்ததும், அத்தென்னை மரம், வளைந்த இடத்தில் இரு கிளையோடு முறிந்து விழுந்தது. நாரத ஸ்வாமி ஆச்சரியம் அடைந்தார். உடனே கிருஷ்ணனிடம் வந்து நடந்ததைச் சொல்லிப் பரிதவித்தார் நாரதர்.

கிருஷ்ணன், நடந்ததற்கு துக்கம் வேண்டாம் நாரதரே! அந்த இடம் தாண்டி 5 மயில் போனால் ஒரு தோப்பில் அனேகம் குரங்குகள் உண்டு. அவைகளில் ஒரே ஒரு கருங்குரங்கு ஒரு கிளையில் வாலால் சுற்றித் தொங்கிக் கொண்டிருக்கும். அதைக் கேட்டால் சொல்லும். இப்போ தெரிந்து வாரும் என்றார். அவ்விதமே சென்று குரங்கைப் பார்த்து, சிநேகிதரே! ஸத்ஸங்கத்தின் விசேஷத்தைப்பற்றித் தயவு புரிந்து சொல்ல வேண்டும் என்று சொன்னாரோ, இல்லையோ, கிளையிலிருந்து குரங்கு விழுந்துமாண்டது ரிஷி கண்ணெதிரே. இதென்ன சோதனை, கிருஷ்ண லீலையாயிருக்குமோ. நான் கேட்க உயிரா போகவேண்டும்? என்று கிலேசப்பட்டுக்கொண்டே திரும்பியும் பரமாத்மாவிடம் வந்து நடந்ததைச் சொல்லித் துக்கத்தால் ஸ்தம்பித்து நின்றார் ரிஷி புங்கவர். அதற்கு கிருஷ்ணன், ஸ்வாமின்! இதற்கேன் கவலை? உம்மைப் பாபம் ஒன்றும் அணுகாது. பயம் வேண்டாம். இப்போது நான் சொல்லுகிறபடி செய்யும் ஜயத்துடன் திரும்புவீர் பாரும்.

இதற்கு 15 மைல் கிழக்கே சேதி நாடு இருக்கிறது. சேதி மன்னனுக்கு இப்போது தான் ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. அந்தக் குழந்தையைக் கேட்டால் நன்றாய்ப் பதில் சொல்லும். தைரியமாய்ப் போய் என்னிடம் வந்து சொல்லும் என்றார் பரந்தாமன்.

போக தைரியக் குறைவாயிருந்தாலும், சுவாமி உத்தரவாயிற்றே வந்தது வரட்டும் என்று அச்சேதி அரசனிடம் தன் வரவைத் தெரிவித்தார். அரசனும் ஆனந்த பரவசனாய் முனிசிரேஷ்டரை அர்க்கிய பாத்யாதிகளால் மிகவும் உபசரித்து ஸ்வாமி! இப்புத்ரோத்பத்தி மகோத்ஸவத்தில் இப்படிப்பட்ட மகான் வரப்பெற்ற என் பாக்யம் என்ன பாக்யம். வந்த விசேஷம் என்ன? தயவு கூர்ந்து அருள்புரிய வேண்டுமென்று வணங்கிச் சொன்னான். அரசே! ஸத்ஸங்கத்தின் மகிமையைப்பற்றி இவ்வுலகில் சொல்லக் கூடியவர் இப்பிறந்த குழந்தையைத் தவிர வேறொருவரும் இல்லை என்று தெரிந்து கொண்டே, குழந்தையைக் கேட்டுத் தெரிந்து போவோம் என்று வந்தேன். குழந்தையைப் பார்க்கலாமோ என்றார் ரிஷி. குழந்தையைக் கொண்டு வரும்படி ராஜன் கட்டளையிட எதிரே கொண்டு வரப்பட்டது குழந்தையும். சகல மங்களமும் உண்டாகுக என்று ஆசிர்வதித்த நாரதர் பின்னும் அருமைக் குழந்தாய்! ஸத்ஸங்கத்தின் பலனை எனக்குச் சொல்லுவாயா? என்று பயந்து கேட்டார் நாரதர். அதற்குக் குழந்தை எல்லாரும் ஆச்சரியப்பட, வாய் திறந்து பின் வருமாறு பதிலளித்தான். மகரிஷே! பிறந்த இரண்டாவது தினத்திலே தங்கள் ஸங்கம் எனக்குக் கிடைத்ததால் நான் மிகவும் தன்யனானேன். எனக்கு இனி நற்கதி என்பதற்குச்சந்தேகமோ? ஸத்ஸங்கமானது இப்படிப்பட்டமகிமையுள்ளது என்பதற்கு தேவரீரே சாட்சி. முதலில் தென்னை மரமான ஜன்மம் கிடைத்தும் தங்கள் தரிசன மாத்திரத்தில் அது உடனே நீங்கி அதைவிட உயர்ந்த ராமதூத குலத்தில் ஜன்மம் உண்டாயிற்று. தங்கள் தரிசன ப்ராப்தியானவுடன் அதுவும் விட்டு "அரிது அரிது மானிடராதலரிது" என்றபடி அதற்கு மேலான ராஜா வயிற்றிலும் பிறக்கும்படியான இப்பாக்கியமும் பெற்றேன். இதைவிட தங்களுக்குத்தெரியாதது நானென்ன சொல்வேன்? என்று சொல்லி நிறுத்தினான் குழந்தை.

இதைக்கேட்டு மிகவும் சந்தோஷித்து மறுபடியும் குழந்தையை உச்சிமோர்ந்து ஆசிர்வதித்து நடந்த அதிசயங்களையெல்லாம் எண்ணிக்கொண்டு வைகுண்டவாஸராகிய கிருஷ்ண பகவான் காலில் விழுந்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்கிறார்.

"அகிலத்தையும் குட்சியில் வைத்து ரட்சிக்கும் புருஷோத்தமரே! ஜகன்மோகனரே! என் மதியீனத்தால் நான் என்னென்னவோ எண்ணினேன். இப்போது ஸத்ஸங்கத்தின் மகிமை நன்றாய் தெரிந்தது. எல்லாம் உம் விளையாட்டே யொழிய வேறில்லையென்று சொல்லி உத்திரவு பெற்று "சிந்தா நாஸ்திகிலா" என்று பாடிவீணையை மீட்டிக்கொண்டு கிளம்பினார்.

ஆகையால் ஸத்ஸங்கத்தின் மகிமை இவ்வளவென்று தெரிகிறது. நாரத மகரிஷியின் தரிசனமே மரத்தை மர்க்கடமாகவும், மர்க்கடத்தைமனுஷ்யனாகவும் செய்விக்குமானால் அது (நல்லவர்கள் சினேகம்) எவ்வளவு விசேஷம் என்று தெரிகிறது. இதையொட்டியே துவாதசமஞ்சரிகாஸ்தோத்ரத்தில் பத்தாவது சுலோகத்தில் ஸத்ஸங்கத்வே........ ஜீவன் முக்தி:. ஸத்ஸங்கத்தால் ஜீவன்முக்தனாகிறானென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையனுசரித்தே முதியவள் ஔவையார் "இனியது கேட்கில் என்னும் அகவலை, அதனினும் இனிது அறிவுள்ளோரைக் கனவிலும் நனவிலும் காண்பது தானே. இப்படியே சுமார் 2000 வருஷத்திற்கு முன்னால் (Socrates) ஸாக்ரேடிஸ் என்ற முதல் ஞானியார் தனக்கு ஒரு சிறு வீடு கட்டிக்கொண்டிருக்கையில், ஒருவர் இவ்வளவு பெரியவர் இவ்வளவு சிறு வீடா கட்டுகிறதென, இச்சிறு இடத்தை அடைக்கத்தகுந்த ஸத்ஸங்கம் ஏற்பட்டால் போதும் என்றார்.

ஜின்னாவும் வைஸ்ராயைப் பார்ப்பார்!

காந்தி வைஸ்ராய் ஸந்திப்புக்குப் பிறகு ஜனாப் ஜின்னாவும் 11உ வைஸ்ராயை ஸந்தித்துப்பேசுவார். ஹிந்து முஸ்லீம் தகராறு விஷயமாக ஸமரஸம்ஏற்படுத்த கனம் ஆகாகான் இந்தியாவுக்கு வருவாராம்.

வங்காளத்தில் ஹிந்து - முஸ்லீம் ஸமரஸ ஏற்பாடு

ஸர்வ கக்ஷி மஹாநாடு கூட்ட உத்தேசம் ஹிந்து ஸபை—லீக் அறிக்கை

வங்காள பிரதம மந்திரி கனம் ஹக்கும் ஹிந்துஸபைக்கார்யதரிசி ஸ்ரீ சட்டர்ஜியும் சேர்ந்து ஹிந்து—முஸ்லீம் ஸமரஸ விஷயமாய் ஓர் ஸர்வ கக்ஷி மகாநாட்டைக்கூட்ட உத்தேசிப்பதாக அறிவித் திருக்கிறார்கள்! இருவகுப்பாருக்குள்ளும அங்கு கசப்பு அதிகரித்து வருவதைத் தடுக்கவே இம்முயற்சி செய்யப்படுகிறதாம். எல்லா அம்சங்களிலும் சாச்வதமான ஸமரஸ உடன்படிக்கை செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுமாம். முக்யமாக வகுப்புத் தீர்ப்பு விஷயமும் யோஜிக்கப்படவேண்டு மென்று ஹிந்துக்கள் விரும்புகின்றனர்.

இந்த மஹாநாட்டிற்கு இரு வகுப்பிலும் விசேஷ ஆதரவு கிடைத்து வருகிறது.

ராஜாங்கம் அண்ணாவைய்யர்

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

போது அவர்களுக்கு, 'அடேயப்பா! இங்கே எல்லோரும் இரும்பால் உடம்பு படைத்தவர்கள் போலல்லவோ தோற்றுகிறது!' என்று தம்முள் நினைத்துக்கொண்டார்கள்.

அப்பால் யாவரும் உண்டனர். பிறகு அண்ணாவையரிடம்விடைபெற்றுக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தனர்.

* * * *

ராஜாங்கம் அண்ணாவையருடைய பரம்பரையினரும் ராஜாங்கமென்ற பட்டத்தை வகித்து வருகின்றனர். அவர்களும் பலசாலிகளாகவே விளங்குவதை நான் அறிந்திருக்கிறேன்.

[இவ்வரலாறு தஞ்சாவூர் ஜில்லாவில் ஊர் தோறும் வழங்கும். இளமையில் இதனைப் பலர் வாயிலாகக் கேட்டதோடு, இப்பரம்பரையினரும் சிவபக்திச் செல்வருமாகிய ராஜாங்கம் ஸ்ரீ பிரணதார்த்திஹர ஐயர் என்பவர் கூறவும் கேட்டிருக்கிறேன்.]

(கலைமகள்)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பிரமாதி-௵ தை-௴ 26௳

கூட்டுக்கக்ஷி மந்திரி ஸபை

தற்காலம் இந்திய மாகாணங்களில் ஜனநாயக முறைப்படி ஒரே கக்ஷி மந்திரி ஸபை இருப்பதை விட எல்லாக் கக்ஷிகளிலிருந்தும் பொறுக்கிய மந்திரிகளமைந்த கூட்டு மந்திரி ஸபை நிர்வாஹம் நடத்துவதே தேசத்தின் அமைதிக்கு ஸாதனமாயிருக்குமென்று அரசியல் நிபுணர் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். கூட்டு மந்திரி ஸபை விஷயமாக சில நாட்களாக விசேஷ வாதப்பிரதிவாதம் நடந்து வருகிறது. இந்த அபிப்பிராயம் கக்ஷித்தலைவர்களிடையில் சிறிது வேலைசெய்யத்துடங்கியிருப்பதாயும் தெரிகிறது. வங்காள மந்திரி ஸபையின் தலைவரான ஜனாப் ஹக் இன்று வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் இந்த அபிப்பிராயத்தைக் காரியத்தில் காட்டத்தாம் தயாராயிருப்பதாக அறிவித்துள்ளார். வங்காள மந்திரி ஸபையில் முஸ்லீம்களே மெஜாரிடியிருக்க வேண்டியது நியாயமாயினும், ஸமரசத்தை யுத்தேசித்து ஹிந்து மஹா சபை கக்ஷிக்கும் மந்திரி பதவியளித்து நிர்வாஹத்தில் பங்கு கொடுக்கத் தயாராயிருப்பதாக அறிவித்துள்ளார். இந்த அறிக்கையானது இந்திய ராஜிய சரித்திரத்தில் ஒரு விசேஷ அம்சமாக கருதப்படுமென்பதில் தடையில்லை. முஸ்லீம் மெஜாரிடியுள்ள மாகாணங்களில் இந்தக் கொள்கை அங்கீகரிப்பட்டு விட்டபடியால், காங்கிரஸ் மெஜாரிடியுள்ள மாகாணங்களைப் பற்றிய விஷயமே வெளிப்படவேணும். இந்தக் கொள்கையை காங்கிரஸ் அங்கீகரிப்பதானால் அது எழு மாகாணங்களில் விட்டுக்கொடுத்து அதிகத்யாகம் செய்யவேண்டிவரும். முஸ்லீம்களோ மூன்று மாகாணத்தில் தான். ஆயினும் கனம் ஹக்கின் யோஜனைக்கு எவ்வளவு தூரம் ஆதரவு ஏற்படுமென்ற விஷயம் இனித்தான் வெளியாகும்.

எப்படியும் இந்த நல்ல ஸந்தர்ப்பத்தை முன்னிட்டு கூட்டுமந்திரி ஸபையை தேசத்தில் அமைக்கவேண்டியது மிக்க நியாயமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது, ஜநநாயக முறைப்படி இந்தியாவில ராஜ்யத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பது வாஸ்தவமாயினும் இந்தியாவின் நிலைமைக்கு அது ஒத்துவரவில்லை யென்பதை அநுபவத்தில் அறிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இது விஷயமாக நமது மாகாணத் தலைவரான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்கள் அநேக பிரஸங்கங்களில் கூட்டு கக்ஷி மந்திரிஸபையை ஆதரித்து அதற்கான நியாயமான காரணங்களைக்குறிப்பிட்டிருப்பதை ராஜிய பிரக்ஞையுள்ளவர்கள் கவனித்திருப்பார்கள்.

ஜனநாயக முறையோ, அதன்படியமைந்த மந்திரி ஸபையோ, ஒரே ஜாதியினரும், ஒரே பாஷை, மதம், நாகரிகம் முதலியவையுமுள்ள ஜனங்களிருக்கும் தேசத்தில் தான் நியாயமானதா யிருக்கும். இந்தியாவைப் போல் பற்பல பாஷைகளும், பலவித மதங்களும், வெவ்வேறு ஆசார, அபிலாஷைகளும் நாகரிகமும் உள்ள ஜனங்கள் நிறைந்த தேசத்தில் ஒரே கக்ஷிப்பிரதிநிதிகள் நிர்வாஹம் நடத்துவது ஸாத்யமில்லை. ஸமீப காலஸம்வங்களால் இது நன்கு நிரூபணமாகிவிட்டது. ஒரு கக்ஷியைச் சேர்ந்த மந்திரிகளின் நிர்வாஹத்தால், தங்கள் வகுப்புக்குத் தீங்கு ஏற்பட்டு விட்டதாயும், தங்களது மதம், கலை, நாகரீகம் ராஜீய உரிமைகள் பாதிக்கப்பட்டு விட்டதாயும் புகார் கூருத ஸமூஹமே இந்தியாவில் இல்லை. இதனால் தேசத்தில் பெருத்த அதிருப்தியும், அமளியும் ஏற்பட்டிருப்பதை மறைப்பதிற்கில்லை. இதற்கு கூட்டுக் கக்ஷி மந்திரி ஸபையே பரிஹாரமென நினைக்கப்படுகிறது.

மேலும் மெஜாரிடிக் கக்ஷி மந்திரி ஸபையானது வோட்டர்களில் ஒரு பகுதியினருடைய பிரதிநிதித்வம் பெற்றதாயிருப்பதிற்கில்லை. ஆதலால் ராஜிய நிர்வாஹத்தில் அவர்களுக்கு எவ்வித ஸம்பந்தமும் இல்லாமல் ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள். பிரஜா ஆக்ஷியின் கொள்கைக்கு இது விருத்தமாயிருக்கிறது. ஆதலால் மைனாரிடிகளுக்கு ஒரு மாதிரியாக வீதாசாரம் கொடுத்து நிர்வாஹத்தில் ஸம்பந்தப்படுத்துவது அவச்யமாகிறது. கூட்டுக்கக்ஷி மந்திரி ஸபை ஏற்படவேண்டு மென்பதற்கு மற்றொரு நியாயமான காரணமும் சொல்லப்படுகிறது. மந்திரிகள் மெஜாரிடி பலத்தினால் அஹம்பாவம் கொண்டு மைனாரிடிகளின் மதிப்பையும் பாத்யங்களையும் துரும்பாக நினைத்து அலக்ஷ்யம் செய்யும் வழக்கம் இந்தியாவில் அதிகமாயிருப்பது தெரிகிறது. இதனால் மைனாரிடிகள் விசேஷமாக ஆத்திரப்பட காரண மேற்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தில் ஜனநாயக தத்துவப்படி மெஜாரிடிக்கக்ஷி மந்திரி ஸபை ஏற்பட்டிருப்பது வாஸ்தவம். அங்கு மெஜாரிடி மைனாரிடி என்ற பேதமானது ராஜீயக் கொள்கையை முன்னிட்டு ஏற்பட்டதேயல்லாது, ஜாதி, மதம், வகுப்பு, ஜனஸங்கயை ஆகியவைகளைப் பற்றியதன்று. இந்தியாவில் அப்படியில்லை. இங்கு ஏற்பட்ட பேதமானது வகுப்புகளைப் பற்றியதாகையால் இங்கிலாந்து உதாஹரணம் உபயோகமில்லை. மேலும் அங்கு மெஜாரிடி கக்ஷியார், எதிர்கக்ஷியாரை மிக்க மரியாதையாக நடத்தி ஒவ்வொருவிஷயத்திலும் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறும் பெருந்தன்மை பொருந்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்தியாவிலோ எதிர்கக்ஷியாரை அவமதிக்கவும், அலக்ஷ்யம் செய்யவும் மெஜாரிடிக் கக்ஷியார் துணிந்து நிற்கிறார்கள். இந்தக் காரணத்தாலும் கூட்டுக்கக்ஷி மந்திரி ஸபைக்கு அதிக ஆதரவு ஏற்பட்டு வருகிறது.

மேலும் ஸ்ரீமான் சீனிவாஸ அய்யங்கார் மற்றொரு விஷயத்தையும் வற்புறுத்துகிறார். உத்யோகம் முதலியவைகளில் ஸம்பந்தப்படுகிறவர்களுக்கு குறிப்பிட்ட இன்னின்ன படிப்பும், அர்ஹதையும் வேண்டுமென்ற நியதி இருந்து வருகிறது. சட்ட ஸபை மெம்பர் பதவிக்கோ, மந்திரி பதவிக்கோ எவ்வித படிப்பும் யோக்யதையும் வேண்டியதில்லை. கல்வி கேள்வியற்ற ஸாதாரண மனிதர்கள் கூட டம்பத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், பண வரும்படிக்காகவும், அதிகார ஆசைக்காகவும் சட்ட ஸபையில் புகுந்து மந்திரிகளாகிவிட இடமிருக்கிறது. இதனால் ராஜ்ய நிர்வாஹமே கெட்டுப்போய் விடுகிறது. சிறந்த அறிவும், அனுபவமும் உள்ள பெரியோர்கள் ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள். கக்ஷிக் கட்டுப்பாடு நிர்ப்பந்தமில்லாவிட்டால் அத்தகைய மேதாவிகளையும் மந்திரிப்பதவியில்வைத்து நிர்வாஹத்தில் ஸம்பந்தப்படுத்தி மிகுந்த லாபமடையலாம்.

இப்போதுள்ள நிலைமையில், சட்ட ஞானமில்லாத சட்ட ஸபை மெம்பர்கள் சட்டங்கள் செய்ய முன் வருகிறார்கள். மத ஸம்பந்தமான அறிவோ, சிரத்தையோ இல்லாத மெம்பர்கள், மதாசாரியார்களுக்குக் கூட சட்டாம் பிள்ளையாகி விடுகிறார்கள். படிப்பு வாசனையே இல்லாதவர்கள், கல்விக் களஞ்சியமாகிய மேதாவிகளுக்கு எஜமானர்களாகிவிடுகிறார்கள். பணமேயில்லாத பேர்வழிகள்ஜமீன்தார்களையும், பணக்காரர்களையும் விரட்டிவிடுவதாக பயமுறுத்தமுடிகிறது. இம்மாதிரியெல்லாம் ஏற்படுவதற்கு ஒருவன் சட்டஸபை மெம்பராகவோ அதிலிருந்து முளைத்தமந்திரியாகவோ இருந்தால் போதுமல்லவா? சட்டஞான வாஸனையேயில்லாமல் சென்னை சட்டஸபையில் மெஜாரிடிக் கக்ஷியார் ஸமீபகாலத்தில் இயற்றிய பல சட்டங்களால் நியாயஸ்தலங்களிலும், ஜனஸமூஹத்திலும் பெருத்த குழப்பம் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே. மத ஸமூஹ விஷயமாயும் அப்படியே.

ஆதலால் கக்ஷி தோரணையில் மந்திரிஸபை அமைப்பதைவிட ராஜீய அறிவுள்ள படித்த மேதாவிகளுக்கு ராஜ்யநிர்வாஹத்தில் பங்கு ஏற்படும்படி மந்திரிஸபை அமைப்பதே விரும்பத்தக்கதென்று ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் கூறுவது யாவராலும் கவனிக்கத்தக்கது.

காந்தி— வைஸ்ராய் ஸந்திப்பு

ஸமரஸம் ஏற்படவில்லை

அடிப்படையில் அபிப்பிராய பேதம்,

டில்லியில் 5௳ யன்று காந்திஜி வைஸ்ராயைக்கண்டு இரண்டு மணி அவகாசம் பேசினார். சுயநிர்ணயம், சுயேச்சை, ஸமஷ்டி ஆகியவிஷயங்களைப்பற்றி காங்கிரஸுக்கும் கவர்ன்மெண்டிற்கும் அடிப்படையான அபிப்பிராய பேதம் அதிகமிருந்தபடியால் ஸமரஸம் ஒன்றும் ஏற்படாமல் காந்திஜி திரும்பிவிட்டார்.

இவ்விஷயமாக காந்திஜி அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறார். காங்கிரஸ் கோரிக்கை அங்கீகரிக்கப் பட்டாலல்லது மந்திரிகள் பதவி ஏற்கமாட்டார்களென்று காந்திஜி சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீ N. E. வேங்கடேச சர்மா பிரசுரங்கள்.

ஸம்ஸ்கிருதம் தமிழ் அகராதி	2	0	0
கிரந்த தமிழ் ,,	4	0	0
தமிழ், ஸம்ஸ்கிருதம் ,,	1	0	0
ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி	1	0	0

கிடைக்குமிடம்;—ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகள் காலமானார்

ஸுப்ரஸித்த மஹாவித்வானாகிய சாஸ்திர திலகம், மஹோபதேசக, மஹாமஹோபாத்யாய, மன்னார்குடி பிரம்மஸ்ரீ யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகள் செவ்வாய்க்கிழமை மாலை 6மணிக்கு குடந்தையில் தமது கிரஹத்தில் காலமான செய்தியைத் தெரிவிக்க மிக வருந்துகிறோம்.

ஸ்ரீ சாஸ்திரியாருக்கு முகத்தின் ஒரு புறத்தில் எற்பட்ட பரு காரணமாகச் சில தினங்களாக சரீர அஸௌகர்யம் ஏற்பட்டது. எவ்வளவோ உயர்தரமான சிகிச்சைகள் செய்யப்பட்டும் பயன்படாமல் போயிற்று.

பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரின் மறைவானது பொதுவாக தேசத்திற்கும், குறிப்பாக வித்வத்ஸமூஹத்திற்கும் ஓர் அளவிடக்கூடாத நஷ்டமாகும். குலகௌரவமும், படிப்பும், ஆசாரமும், விநயமும், சிறந்த பிரவசன சக்தியும் பொருந்திய இவரைப்போன்ற வித்வன்மணிகள் இந்தியாவில் வெகு சிலரே இருக்கக்கூடும்.

பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகள் ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதேந்திராளுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு பெருமையே எல்லாவற்றையும் விளக்கக்கூடும். ஞானத்தினாலும், அநுஷ்டானத்தினாலும், மிகப் பிரஸித்தியடைந்துள்ள அந்த வம்சத்தில் வித்வத்குலத்தில் அவதரித்த ஸ்ரீ ராஜு சாஸ்திரிகளென்ற ஸ்ரீ தியாகராஜ மகீந்திராளுடைய பௌத்ரராக ஸ்ரீ சாஸ்திரிகள் விளங்கி வந்தார். ஸ்ரீமத் ராஜு சாஸ்திரிகளென்ற மஹானுடைய ஞான அநுஷ்டானாதி மஹிமைகளை அறியாதார் ஒருவருமில்லை. தமது வம்ச பரம்பரைக்கு ஏற்றபடி ஸ்ரீ சாஸ்திரிகளும் சிறந்த பாண்டித்யம் பெற்றார். தமது அரிய ஞானத்தைப் பல சிஷ்யர்களுக்குப் பயன்படுமாறு உபகரித்து வந்தார். தென்னிந்தியாவில் ஸ்ரீ சாஸ்திரிகளிடம் வித்யாப்யாஸம் செய்து பிரஸித்த பண்டிதர்களாக விளங்குபவர் பலருண்டு. தமது பிதாமஹர் பெயரால் அத்வைத பாடசாலையும் நடத்தி வருகிறார். லௌகிக பிரமுகர்களும் ஸ்ரீசாஸ்திரியாரிடமிருந்து வேதாந்தாதி விஷயங்களை கிரஹித்துப் பயன் அடைந்தவர் பலருண்டு.

ஸ்ரீ சாஸ்திரிகள் தர்க்க வேதாந்தாதி சாஸ்திரங்களில் பாரங்கதராயிருந்ததுடன், ஸாஹித்யம், இனிய கவிதை, ஸங்கீதம் முதலிய கலைகளிலும் நிபுணராயிருந்தார்.

அதிமேதாவி, சிறந்த ரஸிகர், ஸாரக்ராஹி அத்வைதானந்த அநுபவமுள்ளவர்.

ஸ்ரீ சாஸ்திரியார் கும்பகோணம் அத்வைத ஸபாவின் பிரதான பண்டிதராக இருந்து அத்வைத வித்யை வளர்ச்சிக்கு விசேஷ உபகாரம் செய்து வந்தார். உள்ளூரிலும் வெளியூரிலும் வேதாந்த விஷயமாக ஏராளமான பிரஸங்கங்கள் செய்து ஆஸ்திக ஸமூகத்தின் நன்மதிப்பை பெற்றிருந்தார். கீதா, ராமாயணபாகவதாதி புராணபிரவசனங்கள் பலதடவை செய்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் ஸ்திரீ புருஷர்கள் வந்து ஸ்ரீ சாஸ்திரியாரின் பிரவசன அம்ருதத்தை அநுபவித்து ஆனந்த மடைந்ததை அறியாதவரில்லை. எவ்வளவு கடினமான வேதாந்தார்த்தங்களையும் எளிதான நடையில் யாவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் பிரவசனம் செய்யும் சக்தியானது ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு இயற்கையாக அமைந்துள்ளது. அருடைய உபந்நியாஸங்கள் ஆழ்ந்த கருத்தும் கம்பீரமான நடையும் இனிமையான தோரணையும் உள்ளதாகும்.

ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு 1935ல் கவர்மெண்டார் மஹாமஹோபாத்யாய பட்டம் வழங்கி கௌரவித்தார்கள். ஸ்ரீ சாஸ்திரிகள் மிகுந்த உபயோகமுள்ள பல கிரந்தங்களை இயற்றியிருக்கிறார். 1936 ஜனவரி 10௳ யன்று ஸ்ரீ சாஸ்திரியாரின் ஷஷ்டியப்தபூர்த்தி வைபவமானது குடந்தை முதலான பலவிடங்களில் கொண்டாடப்பட்டதைக் கவனித்தால் ஸ்ரீ சாஸ்திரியாரிடம் ஜனங்களுக்கிருந்த நன்மதிப்பு வெளியாகும்.

ஸ்ரீ சாஸ்திரியார், தமது 65 வது வயதில் வயது சென்ற தாயாரையும் புத்திரர்களையும், புத்திரிகளையும், தர்மபத்நியாரையும், கணக்கற்ற சிஷ்யர்களையும், நண்பர்களையும் விட்டுப் பிரிந்து பௌதிகஉடலை நீக்கிக்கொண்டது மிகவும் துக்கிக்கக்கூடியது. ஸ்ரீ சாஸ்திரியாரின் ஸ்தானமானது, நிகரில்லாத அவரது பாண்டித்யம் காரணமாக பூர்த்தி செய்யக்கூடாத நிலைமையிலேயே இருக்கும்.

செவ்வாய்க்கிழமை இரவு கிரியைகள் ஸ்ரீ சாஸ்திரியாரின் மூத்த குமாரர் ஸ்ரீமகாலிங்க சாஸ்திரியாரால் வெகு நன்றாக நடத்திவைக்கப்பட்டது. நகரத்திலுள்ள லௌகிக, வைதிகப்பிரமுகர்கள் ஏராளமாக கூடியிருந்தனர்.

ஸ்ரீ சாஸ்திரியாரின் குடும்பத்தினர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

நீசமான வழி! எப்படியாவது உத்ஸாஹ சக்தியைக் கிளப்பினால் போதுமென்று கேவலமான கார்யத்திலிறங்குபவரைக் கண்டிக்காமலிருத்தல் தலைவர்க்கழகல்ல. பின்னர் தாங்களே அதனால் கஷ்டப்பட நேரிடுமென்பதை அநுபவித்தும் அறியாதவருக்கு வருந்துகிறோம். சென்னை சுதந்திர தின கொண்டாட்டத்தில் கொடும்பாவி கட்டி எரித்தவரைக் கண்டிக்காததுடன் போற்றியதும் பேராபத்தாம்!

நல்வழியில் செலுத்துக! படக்காக்ஷிகள் பணம் பறிப்பதுடன் பெரும் ப்ரசாரக் கருவிகளாகவுமிருக்கின்றன. பாமர ஜனங்கள் விரும்பி வருவர் என்ற எண்ணங்கொண்டு கேவல ஹாஸ்யம், ஓர்வகுப்பு நிந்தை. அனுசிதமான கார்யம் முதலியவைகளைக் காட்டுவது இன்னமும் பாமரரைப் பரம பாமரராக்குவதாகும். அதர்மத்தால் ஆயிரம் வருவதைவிட தர்மத்தால் ஸ்வல்பம் வந்தாலும் போதும் என்ற எண்ணம் ஏற்படுங் காலமே இந்தியாவிற்கு நற்காலமாம்.

தனமிருந்தால்—? பூர்ண பக்திரஸம் வைதிக ஸதாசாரம், தர்மம், உயர்ந்த எண்ணம், பரந்த நோக்கம் முதலியவைகளைக் கொண்ட ஓர் சுத்த படமெடுத்து உலகிற்கு உதாரணமாகக் காட்டலாம்! நிஷ்பக்ஷபாதமான சிறந்த பத்ரிகையையும் நடத்திக் காட்டலாம். எங்கே?

பகதருள்ளம் பதைக்கின்றது! சென்னையில் சிற்சில படக்காக்ஷிகள் படத்திலிருப்பதைவிட மிக மோசமான வாசகங்களால் ப்ரசாரம் செய்கின்றன. மதாபிமானமும் ஸமூஹ வாழ்க்கையின் உயர்தர நோக்கமுமுள்ளவர் தாழ்ந்த வழியிலிறங்காமலிருக்க வேண்டும். இல்லையேல் பொது ஜனங்களே பாடங் கற்பிக்க வேண்டும்.

சிறந்த தர்ம வீரர்! ஸ்ரீமான் பி. ஆனந்தராவ் அவர்கள் இம்மாதம் 16௳ 100 சாரணர்களுடன் மதுரையைவிட்டுக் கிளம்பி சென்னையில் ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்கப் போவதாக தந்தி கொடுத்ததன் மூலம் அதிகாரிகள் ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்ய அவகாசம் கொடுத்திருக்கிறார்.

வைஸ்ராய்க்கு ஸ்ரீ நடேசய்யர் தந்தி

காந்தி, ஹிந்துக்கள் பிரதிநிதியல்ல.

ஸனாதனத் தலைவரான பிரம்மஸ்ரீ ராவ்ஸாஹேப் என். நடேசய்யரவர்கள் நேற்று முன் தினம் கனம் வைஸ்ராய் அவர்களுக்கு ஓர் தந்தியனுப்பினார்.

அதில், காந்திஜியோடு வைஸ்ராய் பேசி எவ்வித முடிவு செய்தாலும் அது ஹிந்துக்களுக்கு திருப்தியளிக்காதென்றும், காந்திஜி ஹிந்து ஸமூஹத்தின் பிரதிநிதியாக மாட்டாரென்றும், ஸனாதனிகளின் கக்ஷியையும் கலந்து ஆலோசிக்க வேண்டியது அவசியமென்றும், ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறார்.

10௳ யன்று சென்னை கவர்னர் மதுரை ஸனாதனிகளுக்கு பேட்டியளிக்க ஸம்மதித்திருப்பதாக தெரிகிறது.

ஸ்ரீ நாராயணதீர்த்த குருஸ்வாமிகள் ஆராதனை

திருப்பூந்துருத்தியில் மேற்படி ஆராதனை மஹோத்ஸவமானது நிகழும் பிரமாதிஸு மாசி௴ 4௳ வெள்ளியன்று நடைபெறும். 2௳ முதல் 5௳ வரை உத்ஸவவைபவம் நடைபெறும். ஒவ்வொரு தினத்திலும் பிரஸித்தி பெற்ற வித்வான்களைக்கொண்டு ஸங்கீதக் கச்சேரிகளும் பிரஸங்கங்களும் கதாகாலக்ஷேபங்களும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா

திப்பிராஜபுரம்

20—1—40 சனிக்கிழமை ப்ரும்ம ஸ்ரீ ஆங்கரை ரெங்கஸாமி சாஸ்திரிகள். அவர்கள் "ஸ்ரீப்ரும்ம ஸூத்ரத்தில் மேற்கொண்டு 3 அதிகரணங்கள் சொன்னார்.

23—1—40 செவ்வாய் கிழமை தினம் மேட்டூர் ப்ரும்மஸ்ரீ ரெகுதசாஸ்திரிகளவர்கள் கர்மமார்க்கத்தையும்சாதன பக்தி என்றும்ஞானமாக்கத்தையும் ஸாத்ய பக்தி என்பதையும் எடுத்துச் சொன்னார் 'பக்தி'யைப் பற்றிவிரிவாகச் சொன்னார்.

27—1—40 சனிக்கிழமை தினம் வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள், நமது கடமையும், சாஸ்திரங்களின் தத்வமும் என்னும் விஷயத்தைப்பற்றி வெகு அழகாகச் சொன்னார். 3—2—40 சனிக்கிழமை தினம் ஷை யார் அவர்கள் "சூரியோ பாஸனம்" என்னும் விஷயத்தைப்பற்றிச் சொன்னார்.

2-வது வருஷபூர்த்தி கொண்டாட்டம்:— நாளது தை௴ 28௳ (10—2—40) சனிக்கிழமை ஷை ஸபையின் இரண்டாவது வருஷாந்தர வைபவம் நடைபெறும். வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களும், இன்னும் இதரர்களும் பிரஸங்கம் செய்வார்கள். மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (11—2—40௳ திருவையார் ப்ரும்மஸ்ரீ அண்ணாசாமி பாகவதர் அவர்களுடைய திவ்ய ஹரிகதா காலக்ஷேபம் நடைபெறும்.

(ந. கி.)

மற்றது எப்படியாவது இருக்கட்டும். நமக்கு இப்படி பேசுந்தீரர் ஒருவர் கிடைத்தது பெரும் லாபம்.

வைதிக ஸமயத்தின் மஹிமை

ஆசாரமே வைதிகமதத்தின் ரக்ஷை

ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் பிரஸங்கம்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீபகவத் பாதாசாரியாள் ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் சீகாழித்தாலூக்கா குன்னத்தில் அருளிச்செய்த உபதேச மொழிகளின் சாராம்சம்:—

நம் பாரத பூமி ஸுபிக்ஷமாக என்றும் விளங்கவேண்டுமானால், வைதிக மதம் என்னாளும் தழைத்து ஓங்க வேண்டும். இவ் வைதீக மதம் எல்லா மதத்தைக் காட்டிலும் யுககாலமாக நிரந்தரமாக நின்று வருவதன் காரணம் அம்மதம் ஆசாரத்தை அடிப்படையாக கொண்டிருப்பது தான். இந்த ஆசாரம் உன்னதமான நிலைமையில் ஒரு போதும் குன்றாது இருப்பது பிராமணர்களாலேயே. இதர வருணத்தவர்கள் தனித்தனி தங்களுடைய ஆசார அனுஷ்டானங்களினாலே ஆத்ம பலத்தைச் சம்பாதித்து வைதிக சமுதாயத்திற்கு அதிக பலத்தைக் கொடுத்து வருகின்றனர்.

வர்ணம் ஒன்றே போதும். ஆசாரம் வேண்டியதில்லை. என்போர் ஒரு சிறு திருஷ்டாந்தத்தைக் கவனிக்கவேண்டும். முதலில், ஒரு வாயு விமானி என்ற பலூனை ஒரே காற்றுப்பையுடன் பறக்க விட்டனர். அது பறந்து செல்லுகையில் அகஸ்மாத்தாய் காற்றுப்பையில் சிறு துவாரமேற்பட்டதாலும் அது கீழே விழுந்துவிட்டது. பின்னர் பல வாயுப்பைகளை இணைத்து ஆகாயத்தில் செல்லவிட்டனர். ஒரு வாயு பையில் துவாரமேற்பட்டாலும், இதர பைகள் விமானி கீழே விழாதபடி தடுத்தன. அப்படி துவாரம் உண்டான பையையும் எளிதில் சீர்திருத்திவிடலாமெனவுங் கண்டுகொண்டனர். அது போலவே வைதிக மதத்திற்கு ஜீவாதாரமாயுள்ளது ஆசாரம். இந்த ஆசாரத்தைச் சீலத்துடன் ரக்ஷிப்பவர்கள் பரம்மகுலத்தவர் இவர்கள் ஏதாவது சிறிதளவு தங்கள் ஆசாரத்தில் குறைவுபட்டவர்களானால் இவர்களையடுத்துள்ள வர்ணத்தவர்கள் தத்தமக்கு விதித்துள்ள ஆசார விதிகளைத் தவறாமல் அனுஷ்டித்து தங்கள் சீலத்துவத்தினால் வைதீக சமூகத்தை ரக்ஷித்து வருகிறார்கள்.

எல்லா மதங்களைக்காட்டிலும் வைதிக மதத்தில் அதிகாம்சமாயுள்ள ஆசாரத்தை காப்பவர்கள் ப்ராம்மணர்கள். இவர்களது பாரம்பரீயம் ஆசார ரக்ஷகமே. இவர்கள் பிறப்பின் விசேஷத்தால் ஆசாரமென்பது இரத்தத்தில் ஊறியிருக்கின்றது. எந்த விதத்திலும் இவர்கள் தங்கள் ஆசாரத்தை விட்டுவிடுவது என்பது இவர்களது மனச்சாட்சிக்கு விரோதமானது. உத்யோக நிர்ப்பந்தத்தால் ஆசாரவிஷயத்தில் சற்று தவறிப்போக நேரும். சிலர் கூடப்பின்னர் தம்முடைய பழைய உன்னத ஆசாரங்களை தவறாது அனுஷ்டித்தே வருகின்றனர்.

இப்படி பராம்பரிய தர்மமாகக்கொண்டு ப்ராம்மணர்களால்ரக்ஷிக்கப்படும் ஆசாரமே, வைதீக மதத்தை காப்பாற்றி வந்திருக்கின்றது. தவிர, வேறு எந்த மதத்திலுமில்லாத ஒரு தலை சிறந்த அம்சம் இவ்வைதிக மதத்திற்குரியது.

அது தான் பிதுர் கார்யம் அல்லது இறந்தவர்கட்கு சிராத்தாதிகளினாலும் திலதர்ப்பணாதிகளினாலும் செய்யப்படும் கடனாகும். இது சம்பந்தமாய்ச் சந்தேகமுண்டாகும் சிலர் பின்கண்ட திருஷ்டாந்தத்தை நோக்குவார்களாக:-

ஒரு சிறு ஊரில் வைதீகப்ராமணர் பம்பாயிலுள்ள தன் பையனுக்கு ஒரு தந்தி மணியார்டர் செய்யும்படி தபாலாபீஸ் குமாஸ்தாவிடம் பணத்தைக் கொடுத்தார். குமாஸ்தா ரசீது கொடுத்துவிட்டு “சரி மணியார்டர் செய்தாய் விட்டது போய் வாருங்கள்'' என்றனர். வைதீகர் “என்ன ஏமாற்றுகிறீரே. பணம் நான் கொடுத்தபடி உங்கள் மேஜையின் மீது இருக்கின்றதே'' எனக் கேட்டனர், குமாஸ்தா “தங்களுக்குச்சந்தேகம் வேண்டாம். நாம் பேசிக்கொண்டிருந்த சில நிமிழங்கட்குள் பணம் தங்கள் புத்திரனுக்கு கிடைத்திருக்கும். இதற்கு அத்தாக்ஷியாகக் கடிதம் வரும் எனக்கூறினார். அப்படியே லிகிதமும் வந்தது. வேதியருக்கு ஆச்சர்யமுண்டாயிற்று, அவர் தந்திக்கம்பியில் துளைக்கப் பட்டிருக்கும் துவாரத்தில் பணத்தை போட்டால் தான் அப்பணம் போகுமென நினைத்துக்கொண்டிருந்தார். பின்னால் அதன் இரகசியமின்னதெனத் தெரிந்தது. கேவலம் மனுஷ்ய யுக்தியால் நிர்மாணிக்கப்படுள்ள மின்சாரசக்திக்கே அவ்வளவு பெருமையுண்டென்றால் மந்திரத்தின் மகிமைக்குச் சொல்லவும் வேண்டுமா?

ஆனால் நம் மதத்தைக் கெடுத்துவந்ததன் காரணம் ஆசாரமேயென சீர்திருத்தக்காரர்கள் பிரசாரஞ்செய்து வருகிறார்கள். ஆசார அனுஷ்டானங்கள் மாத்திரம் நம்முடைய மதத்திலில்லாதிருந்தால் ஆபத்காலமான ஆயிர வருஷங்களில் ஒரு பத்து வருஷங்கள் கூட நம்முடைய மதம் நிலைத்திராது. ஆசாரம் மதத்தை எப்படி ரக்ஷிக்கின்றதென்பதை சற்று கவனிக்க வேண்டியதவசியம். நம்முடைய வைதீகமதத்தில் தூரவிலகி நிற்கவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் தீண்டாத குலத்தவர்கூட இன்னும் தங்களைப் பெரும்பான்மையோர் கூவிஅழைக்கும் பிறமதங்களைத் தழுவ மனமில்லாமல் தங்களைப் புறக்கணிக்கும் சுயமதத்திலேயே நிலைத்திருக்கிறார்கள். ஆயிரம் வருஷங்களாக இவர்களை நம் மதத்தினின்று வேறுபடுத்த பலமான முயற்சிகளிலிருந்தும் நம் மதத்திலேயே பெரும்பாலோர் நின்றிருப்பதின் தத்துவம் சற்று ஆலோசித்தால் வெளியாகும்.

ஒரு தீண்டாத குலத்தவனை, ஒரு கிருஸ்தவபாதிரியோ அல்லது மௌல்வியோ, தன் மதத்தைத் தழுவும்படி கூவிஅழைக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். வேறு நிர்பந்தங்களில்லாதபோது அந்த சமயத்தில் தீண்டாதவனுடைய மனதில் எவ்விதமான எண்ணம் ஏற்படும்! நாம் கும்பிட்டுவரும் வேதியன் நம்மைவிட ஆசார விஷயத்திலும் எவ்வளவோ பரிசுத்தமாயிருக்க அவனைக் கும்பிடுவதைவிட்டு நம்மைவிடக் கேவலமான ஆசாரத்தையுடைய இப்பாதிரி காலில் ஏன் விழுவது? என்ற எண்ணம் அவன் மனதை நிச்சயமாய் குடிகொள்ளும்

ஆசாரத்தின் ரக்ஷணத்திற்காகவேநாம்அவர்களைபுறக்கணிப்பினும், நம்மைவிட்டு அகலாத கோடிக்கணக்கான ப்ரஜைகளை அன்புடன் கட்டிவைக்கும் நமது வைதீக சமயத்திற்கு, என்றைக்குக் கேடுகாலமென்றால் இத்தகைய ஆசாரத்தைகைவிட்ட நாளேயாகும். இந்த ஆசாரத்தில் மக்களுக்கு எவ்வளவுக்கவ்வளவு ஊக்கமேற்படுகின்றதோ அந்த அளவில் நமது வைதிகசமயம் ஸ்திரமாக நிற்கும்.

16உ ஸத்யாக்ரகம் ஆரம்பிப்போம்

வைஸ்ராயுக்கும் கவர்னருக்கும் அறிவிப்பு

வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கத்தின் மெம்பரும் ஸத்யாக்ரக கமிட்டியின் தலைவருமான ஸ்ரீமான் ஆனந்தராவ் வைஸ்ராயிக்கு ஓர் அவஸரவிண்ணம் அனுப்பியுள்ளார். அதன் பிரதிகள் சென்னை கவர்னருக்கும் கனம்போக்கு துரைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆலயப்பிரவேசசக்சட்ட ரத்து விஷயமாக சென்னை கவர்ன்மெண்டார் கொடுத்தபதில் ஆக்ஷேபகரமாயிருப்பதாயும், அச்சட்டத்தை ரத்துசெய்யா விட்டால் பிப்ரவரி16உயன்று 100பேர்களடங்கிய முதல் கோஷ்டியானது ஸத்யாக்ரஹத்தில் இறங்குமென்றும் அதில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஸர்வஹித ஸாஹித்ய மண்டலம் திருச்சி.

9, தண்ணீர்ப்பந்தல் ஸ்டோர், தெப்பக்குளம் போஸ்டு.

ஸ. ஸா. ம. அங்கத்தினராதல்	அச்சடித்தல், வெளியிடுகளில் நன்மைகள். (4-வதுவிதி)
1	
ஸ. ஸா. ம. வித்யா ஸங்கம்	சொந்த/தொழில் வேலைகள் 50/25 ச. வி. குறைவு
1	கொடை ரூ. 1-க்கு டிம்மி 1/8பக்கம். இனம்.
நிச்சயமான ஆத்ம அபிவிருத்தி	சிறு வெளியீடுகள் இனம்.
1	
ஸர்வஹிதம்—அனைவர் நலம்	ஸ. ஸா. ம வெளியீடுகள் 25. ச. வி. குறைவு
	மற்றும் பல நன்மைகளுமுண்டு.

கொடையாளர்: குறைந்தது ரூ 1. (வருடத்திற்கு:) அங்கத்தினர்: அணா 4.

தார்மிக வித்யா ஸங்கம் அறநெறிக் கல்விச் சங்கம்

மண்டலத்தின் 5-வது விதிப்படி ஸ. ஸா. ம. கல்விச்சங்கம்.

விழிமின்! எழுமின்! முந்துமின்!

ஸத்விஷயப்ரவசனம், படனம், பஜனை, கதாகாலக்ஷேபங்கள் இவற்றின் மூலம் ஆத்ம அபிவிருத்தியையும், லோக க்ஷேமத்தையும்கோரி ஒவ்வொரு ஊரிலும், நகரவீதி ஒவ்வொன்றிலும் இச்சங்கம் ஒன்று வேண்டும். சீக்கிரத்தில் ஆரம்பிப்பவர் நிரந்தர கௌரவ அங்கத்தினராவர்.

நற்சங்கங்கள், பஜனைமடங்கள், முதலியன மண்டல 6-வது விதிப்படி இணைக்கப்படும்.

ஒவ்வொரு கொடையாளரும், இனம் வெளியீடுகள் மட்டும் (அவர் மூலம்) பெற உரிமையுள்ள, 4 இலவச அங்கத்தினர்களைச் சேர்க்கலாம்.

அங்கத்தினர் சேர்க்க நமூனாக்களுக்கும் மற்ற விவரங்களுக்கும் உடனே எழுதி இஹபர லாபமடையுங்கள்.

லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து!

தார்மிகர்களுக்கு ஓர் விக்ஞாபனம்

ஆர்யதர்மத்திற்கு உதவுங்கள்

ஜனங்களின் மனதைக் கவருவதற்கு பிரசாரமும், பிரசாரத்திற்கு பத்திரிகையும் இன்றியமையாத சாதனமென்பது யாவருமறிந்ததே. அரசியல் தலைவர்களும், தமது கொள்கைகளைப்பரப்பி வலிமைபெற தனித்தனி பத்திரிகைகளை நடத்துவதையும் காண்கிறோம். பல ஸ்தாபனங்களும் பல்வேறு பத்திரிகைகளை நடாத்துகின்றன. விஷயங்களைப்புரட்டியும், திருத்தியும் வெளியிடுகின்றன.சில நாள்களுக்குள் மறைகின்றன. பத்திரிகையின் தீவிரமான பிரசாரத்தினாலேயே, மக்களின் மனதில் ஓர் தீவ்ரமான எண்ணம் உதயமாகி உருவாகப்பட்டு பொது ஜனாபிப்பிராயமாக வெளிவருகின்றது. பல்வேறு நோக்கங்கொண்டாரம்பிக்கப்பட்டிருக்கும் பத்திரிகைகளெல்லாம் ஸனாதன தர்மத்தை நிலைநிறுத்த உதவவில்லை. ஏன்? அநேகமாக அழிக்கவே பாடுபடுகின்றன என்றாலும்மிகையாகாது. முக்கிய பத்திரிகைகளும் சநாதன தர்ம சம்பந்தமான விருத்தாந்தங்களை மூத்தாள் குழந்தைகளாகவே நடத்துகின்றன. பல பத்ரிகைகள் நமது பிராசீன தர்மத்தை யழிக்கவும், ஆஸ்திகவித்தின் ஆணிவேரை அகற்றுவதையுமே நித்ய கர்மாக்களாகக்கொண்டு காலம் கடாத்துகின்றன. நம் கையினால் நம் கண்ணைக்குத்திக்கொள்வதுபோல நாமே பணத்தைக்கொடுத்து அவற்றை சற்று நேரம் சுகமான காலப்போக்கிற்காக வாங்கி படிக்கின்றோம். இத்தகைய தீய பிரசாரத்தினால் நமது பால்யர்கள் எவ்வளவு தூரம் கெட்டிருக்கின்றார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

இப்படியிருக்க நமது ஆர்யதர்மம் இருபத்தைந்து வருஷ காலமாக ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றுவதையே தனிப்பெரும் முக்ய நோக்கமாகக் கொண்டு நடத்தி வரும் ஒரே பத்திரிகை யென்பது ஸர்வ ஜனவிதிதம்.இந்த இருபத்தைந்து வருஷகாலங்களில் எவ்வளவோ பத்திரிகைகளில் தோன்றின மடிந்தன. நமது ஆர்ய தர்மத்தின் பொருளாதாரநிலை எவ்வளவு மோசமானதாயிருப்பினும், எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கும் எதிர்ப்பிற்கும் ஈடுகொடுத்து அதிக சந்தாதாரர்களில்லாத நிலையில் போட்டிப் பந்தயங்கள், போலி விளம்பரங்கள், அரை நிர்வாண சினிமாப்படங்கள், காமோத்தீபகமான சிறுகதைகள் முதலியவை யின்றி 25 ௵ காலமாக பேப்பர் அதிக விலையான இச்சமயத்திலும் அதை நடத்தி வரும் அதன் நிருவாகிகளை ஆஸ்திகர் யாவரும் மிகவும் பாராட்ட வேண்டும். ஏன்! தார்மிக உலகமே அவர்களுக்குக் கடமைப் பட்டதாகும்.

வேதாந்தம், காளிதாஸாதி கவிகளைப்பற்றிய விமர்சங்கள், ராமாயணாதி கதைகள், துர்கக்ஷிகளுக்கு பதில் இவ்வெல்லா வம்சங்களையும் கொண்டு, சிறந்தமுறையில் பத்திரிகையை நடத்த நாம் என்ன உதவி செய்திருக்கின்றோம்? இந்த குறைந்த சந்தாவிலும் குறைந்த சந்தாதாரர்களுள்ள நிலையிலும் பத்திரிகை நடப்பதே அத்புதமல்லவா?

இந்த சமயத்தில் ஆஸ்திகர்களனைவரும் ஜாதிமதபேத மின்றி தர்மஸம்ரக்ஷணத்தையேநோக்கமாகக்கொண்டு உதவினால் நமது பத்திரிகை பல வம்சங்களையுங்கொண்டு சர்வஜனரஞ்சகமாக பத்திரிகாவுலகில் தலைநிமிர்ந்து மற்ற பத்திரிகைகளுக்கு ஆதர்சமாக விளங்கும்.

நமது பத்திரிகைக்கு எவ்விதம் உதவுவது?

கிருஸ்துவமதத்தில் அதன் மதத் தலைவர்கள் மதாபிவிருத்திக்கும் அதற்கனுகுணமான பத்திரிகைகளுக்கும் எவ்வளவு பணம் சிலவிடுகின்றனர். நமது மதரக்ஷணத்திற்காகவே ஏற்பட்ட நமது மடாதிபதிகள், நம் மதரக்ஷணத்திற்காகவே நடக்கும் ஒரே பத்திரிகையை இப்படி கைசோரவிடலாமா? இதை சிறந்த நிலைக்குக் கொண்டுவருவது அவர்களின் தனிக்கடமையல்லவா? அவர்கள் ஒருங்கே மனம் வைத்தால் நமது ஆர்யதரும காரியாலயம் சிறந்த ஸ்தாபனமாகி விடாதா? இனியும் காலதாமதம் செய்யாமல் அவர்கள் நமது பத்திரிகைக்கு மூலதனம் ஏற்படுத்தவேண்டும். தவிர ஏராளமாகி ஆரியதர்மம் பிரதிகள் வாங்கி இலவசமாக கலாசாலைக்கும் வாசகசாலைகளுக்கும் வழங்கவேண்டும்.

முக்கியமாக நமது தர்மத்தையும் குலாசாரத்தையும் காப்பாற்றவேண்டியது நமது பண்டிதர்களின் கடமையாகும். ஆனால் அவர்கள் நமது பத்திரிகையில் உபேக்ஷையாகவே இருக்கிறார்கள் என்பதை வெட்கத்துடன் சொல்ல வேண்டியிருக்கின்றது. நமது நாட்டில் சாஸ்திரக்ஞர்களான-பிராபல்யமான-எவ்வளவோ வித்வான்களிருக்க அவர்கள் ஏன் நமது பத்திரிகைக்கு பிரதிபிரயோஜனத்தை எதிர்பாராது விஷயதானம் செய்யக்கூடாது? இப்படி இவர்கள் சாஸ்திர விசாரத்தையும், தர்மானுஷ்டானங்களையும், மற்றவைகளையும் மட்டில் ஒருபுறம் கவனித்துக்கொண்டிருக்க நாட்டில் எங்கும் சீர்திருத்த வாதிகள் கண்டபடி சாஸ்திரார்த்தங்களை பிரசாரம் செய்ய, மந்தமதிகளான இளைஞர்கள் தினே தினே கெட்டு வருவதை காண்கின்றோமல்லவா? இனிமேலாவது பெரிய வித்வான்கள் நமது பத்திரிகை வாயிலாகத் தங்கள் கடமையைச் செய்ய தாமதமின்றி முற்படவேண்டும்.

படித்தவர்களாயும், (மேல் நாட்டு முறையிலும் கீழ் நாட்டு முறையிலும்) நல்ல ஆசார சீலர்களாயும் லௌகீக வாழ்வில் முன்னணியில்நிற்பவர்களாயும், விசேஷமாக நமது ஆர்யதர்மத்தினிடம் அபிமானங் கொண்டவர்களாயுமுள்ள சில கனவான்கள் வேறு சில பத்திரிகைகளில் எழுதியுள்ள சில கட்டுரைகளை நாம் படிக்க நேர்ந்தபோது, ஐயோ! இவற்றை ஆர்யதர்மத்தில் படிக்கும் பாக்கியமில்லையே என்று வருந்த நேரிட்டது. இத்தகைய கனவான்கள், நமது பத்திரிகைக்கு மூலதனம் ஏற்படுத்த உதவுவதுடன், கௌரவ ஆசிரியர்களாக இருந்துக்கொண்டு விஷயதானமும் செய்து வந்தால் (தங்களுக்கு அவகாசம் நேர்ந்தபோது) எவ்வளவு நலமாக இருக்கும்? சில பத்திரிகைகள் பொதுவாழ்வில் சிறந்து நிற்கும் சில கௌரவ ஆசிரியர்களினால் விளங்குவது வெள்ளிமலை. ஏனைய சவுகர்யங்கள் ஏற்படினும் பொதுவாய் சிறப்புற விளங்கும் கனவான்களும், பிரஸித்தி வாய்ந்த வித்வான்களும் எழுதி வந்தால் தான் நமது பத்திரிகை பிராபல்யமடையும். வீண் வாசாஅநுதாபத்தினால் பயனில்லை—இவர்கள் இக்கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்ள எல்லாம்வல்ல இறைவன் அருள வேண்டுகின்றேன்.

ஆஸ்திகர்களனைவரும் ஜாதிமதபேதமின்றி ஆரியதர்மத்திற்குச்சந்தாதாராகச்சேரவேண்டும். சேராதவர்களை சேரும்படி செய்ய வேண்டும். படிக்கத்தெரியாதவர்களுக்குப் படித்து காட்டவேண்டும். சந்தாதார்கள் அதிகமானால் தான் பக்கங்களை அதிகப்படுத்தி கூடுமானவரை சந்தாதுகையை அதிகப்படுத்தாமல் பின்ன பின்ன ருசியுள்ள பலருக்கும் ரஞ்சகமாக நமது தர்மத்திற்கு அநுகுணமாக எழுதி பிரசுரம் செய்யமுடியும். பலதுளி பெரும்வெள்ளம். சந்தாதார்களாகிய அஸ்திவாரத்தின்மீது தான் பத்திரிகையாகிற கட்டிடம் நிற்கவேண்டும். ஸ்ரீராமபிரானின் சேதுவிற்கு அணிலும் உதவியதல்லவா? இந்ததர்ம சேதுவாகிய நமது பத்திரிகைக்குக் கூடுமானவரை நாமும் உதவவேண்டாமா?

இக்கொடிய கலிகாலத்திலும் ஸ்திரீகளே கூடிய வரை ஆசார அநுஷ்டானங்களைக் காப்பாற்றி வருகின்றார்கள். புருஷர்கள் நாஸ்திகர்களாக இருக்கும் வீடுகளிலும் ஸ்திரீகள் தெய்வ பக்தியுடன் திகழ்வதை கண்கூடாகக் காண்கின்றோம். அத்தகைய நமது ஸ்திரீ ரத்னங்களையும் தர்ம பிரஷ்டைகளாக்க முயற்சி நடப்பதையும் காண்கின்றோம். நமதுபெண்மணிகள் அத்தகையகேட்டிற்கிடமளிக்காமல், வீண் நாவல்களையும் கதைகளையும் விட்டுவிட்டு நமது ஆயர் தர்மத்தை விடாமல் படித்து வரவேண்டும். பால்யர்களையும் படிக்கும்படி செய்து தர்மவான்களாக்க வேண்டும். புருஷர்கள் இப்பத்திரிகைக்கு சந்தாதாராக யில்லாமலிருந்தால் உடனே சந்தாதாராக சேரும்படி செய்ய வேண்டும். நாம் கொடுக்கும் பணத்திற்கு பத்திரிகை கிடைக்கின்றது. தர்ம சம்ரக்ஷணத்திற்கு உதவி செய்ததினால் புண்யம் கிடைக்கின்றது.

நன்றே செய்க! அன்றே செய்க!என்பதற்கேற்ப முற்கூறிய நம் கடமைகளை ஆஸ்திகர்களாகிய நாம் உடனே செய்தால், வெள்ளிவிழா கொண்டாட வேண்டிய இவ்வருஷத்தில் நமது பத்திரிகையான ஆர்ய தர்மம் சீருடனும் சிறப்புடனும் விளங்கும்.

தர்மஸம்ரக்ஷகனான பகவான் கோபால கிருஷ்ணன் அப்படியே அருளுவானாக:

அறத்தினூங்காக் கமு மில்லை யதனை
மறத்தலி னூங் கில்லை கேடு.—குறள்

பாலகிருஷ்ண தீக்ஷிதர்.

மேலக்காவேரி பெற்றோர் சங்கம்

குடந்தை மேலக்காவேரி முனிசிபல் ஹிந்து பாடசாலையில் ஷெடி சங்கத்தின் கூட்டமொன்றை ஷெடி பாடசாலை தலைவர் ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி அய்யர் ஜனவரி 28௳ ஞாயறன்று கூட்டினார். அவ்வமயம் பள்ளிக்கூடங்களின் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் ஆர். ராமஸ்வாமி அய்யர் பி. ஏ. எல். டி. அவர்கள் அக்ராஸனம் வகித்தனர் ஆரம்பத்தில் கடவுள்வணக்கம், சுகாதாரப் பாட்டு, ஹாஸ்யஸம்பாஷணை, தேசியபாடல்கள், அபிநயபாட்டு கிராமசீர்திருத்த சம்பந்தமான சில குறிப்புகள் மாணவர் மூலம் நடத்தப்பட்டது. நகரிலுள்ள பல கல்விமான்கள் வந்து அலங்கரித்தது குறிப்பிடத் தக்கது. அரசாங்கக் கல்லூரி தமிழ் ஆசிரியர் ஸ்ரீமான். எல். சீனிவாஸ அய்யர் அவர்கள் தற்கால கல்விமுறை என்பதைப் பற்றி ஓர் அழகிய சொற்பொழிவு நிகழ்த்தினர். பிறகு பல அபிமானிகள் பேசினார்கள். அக்ராஸனர் மிக அழகிய நடையில் ஒவ்வொரு பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய விதிகளைக் கூறி, ரஸமான பல விஷயங்களைக் குறிப்பிட்டார். பிறகு பெற்றோர்களின் சார்பாக ஸ்ரீமான் வி. ராமச்சந்திரய்யர் எல்லோருக்கும் நன்றி கூறினர். உபந்யாஸருக்கும் மாலை சூட்டி வந்தனோபசாரத்துடன் இனிது நிறைவேறியது.

(ந. கி.)

ஹிந்து தர்ம ஸித்தாந்தஸபா

சைத்தாப்பேட்டையில் மாபெரும் கூட்டம்

தைமீ 8உ ஞாயிற்றுக்கிழமை (21-1-40) மாலை 6மணிக்குமேல் சைதாப்பேட்டை பெருமாள் கோவில்தெருவில் ஸ்தாபித்து இருக்கும் ஸ்ரீராமானுஜ விஜயவிலாச மண்டபத்தில் ஸ்ரீமான் பிரம்மஸ்ரீ வெங்களத்தூர் சுப்பிரமணியசாஸ்திரி அவர்களால் ஸபாதிறந்து வைக்கப்பட்டது. மாலை 7மணிக்கு மேற்கண்ட மண்டபத்திலிருந்து பெரும்கூட்டமாய் மேளவாத்திய கோஷங்களுடன் பெருமாள்கோவில் நால்கால் மண்டபத்திற்கு அருகில் ஸ்தாபித்து இருக்கும் தர்மதுவஜத்தை சூழ்ந்துகொண்டு நிற்க பிர்ம்மஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகள் மேற்கண்ட கொடியை ஏத்திவைக்க ஏற்கனவே ஏற்பாடு செய்த பிரகாரம்ராவ்சாஹேப் வேணுகோபாலசெட்டியார் வர சௌகர்யபடாமையால் சைத்தாப்பேட்டை நகரசபை தலைவர் (சேர்மன்) ஆர். வி. ராமஸாமிசெட்டியாரை தர்மகொடியை ஏற்றிவைக்க கேட்டுக்கொள்ள பிறகு செட்டியார் தர்மகொடியை மேளவாத்ய கோஷங்கள் முழங்க கரகோஷத்துடன் தர்மகொடியை ஏத்திவைத்தார்.

பிறகு ஷை பேட்டை சத்வித்தியா பாடசாலை மாணவிகளால் கொடி வணக்கம் செய்யப்பட்டது. பிறகு சாஸ்திரிகள் தர்மதுவஜத்தின் மேன்மையை பற்றியும் இந்த கொடியின் கீழ் எல்லோரும் ஒன்றாய் சேர்ந்து நம் ஸனாதனதர்மத்திற்காகபோராடவேண்டும் என்றும் இந்தத்துவஜம்தான் என்றைக்கும் அழிவு இல்லாமல் இருப்பது என்றும் வெகுவாக பேசினார். பின்பு எல்லோரும் மேல்கண்ட மண்டபத்திற்கு கூட்டமாக போனார்கள். அதன் பிறகு சத்வித்தியா பாடசாலை மாணவிகளால் கடவுள் வணக்கம் செய்த பிறகு மேட்டுபாளையம் ஆயுர்வேத பண்டிட் எஸ். ஜி. ஆராவமுத அய்யங்கார் சபாவுக்கு பிர்மஸ்ரீ வெங்களத்தூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளை அக்கிராசனாதிபதியாக இருக்க பிரார்த்திக்க அதை கே. கிருஷ்ணராவ் (தாலூக்கா ஆபீஸ் எட் கிளார்க்) ஆமோதிக்க அக்கிராசனாதிபதி பீடத்தில் சாஸ்திரிகள் அமர்ந்தார். பிறகு, மாம்பலம் கோதண்ட ராமஸ்வாமி ஸன்னதி அர்ச்சகம் உ. வே. பெ. வெங்கடரங்க பட்டாசாரியர் சாஸ்திரிக்கு கர கோஷத்தினடை மாலை போட்டார்.

அக்கிராசனாதிபதியின் பிரசங்கம்:—இந்த மஹா சபாவுக்கு என்னை அக்கிராசனாதியாய் தேர்ந்தெடுத்ததிற்கு நன்றி பாராட்டுகிறேன். தற்காலம் நம் தர்மம் குறைவதின் நோக்கம் நாம் அதை விருத்தி செய்யாததேதான். இனிமேலாவது நம் பேட்டை வாசிகள் ஒன்று சேர்த்து நம் தர்மத்தை இச்சபா மூலமாக விருத்தி செய்யவேணும் என்றும் பேசினார்.

பிறகு மாம்பலம் ராமகிருஷ்ண மிஷன் சமுஸ்கிருத உபாத்தியாயர் வித்துவான்ரங்கநாத அய்யங்கார்பேசியதாவது:-இந்துக்கள் எல்லோருக்கும் சனாதன தர்மம் பொது என்றும் இச்சபையில் பிராமணர்கள் பிராமணர் அல்லாதார்கள் எல்லோரும் சேரலாம் என்றும் நாம் எல்லோரும் காலாகாலத்தில் சந்தியாவந்தனத்தை தவராமல் செய்துவரவேணுமென்றும் நாம் காப்பிகுடியையொழிக்கவேணுமென்றும் காப்பியால் ஏற்படும் கெடுதியையும் சொல்லி மேலும் நம்மவர்கள் ஆங்கில படிப்பினால் ஏற்படும் அனாசாரங்களை வெகுவாய் கண்டித்து முன்பு நம் பெரியோர்கள் வியாதிவரவொட்டாமல் முன்யோஜனையாகவே விருதாதிகளையும் ஆசாரங்களையும் ஏற்பாடு செய்தார்கள் என்றும் அதைவிட்டு நாம் கண்ட இடங்களில்சாப்பிடுவதினாலும்கண்டபோது ஆகாராதிகளை புசிப்பதினாலும் நமக்கு புதிது புதிதான வியாதிகள் ஏற்படுகிறது என்றும் நம் ஸ்திரீகள் மஞ்சள் குங்குமம் முதலான மங்களகரமான வஸ்துகளைவிட்டு மேல் நாடுகளிலிருந்து வரும் சோப்புகளை உபயோகித்து பண சிலவும் வியாதி விருத்தியும் அடைந்து கஷ்டபடுகிறார்கள் என்றும் நம் தர்மங்களை சரியாக அனுபவிக்காமல் இருப்பதால் நாட்டில் துர்பிக்ஷம் சோரபயம் துர்மரணம் ஏற்படுகிறது என்றும் விரிவாக பேசினார். பிறகு எஸ். கே. சுப்பிரமணிய அய்யர் (டிரஸ்டிக் போட்டர் எட் கிளார்க்.) வந்தனோபசாரம் செய்ய சந்தன தாம்பூலம் கற்கண்டு வழங்க சபையின்கூட்டம் இனிதாக முடிந்தது.

காரியதரிசி,

சை. ந. கிருஷ்ணபட்டாசாரி.

ஹிந்து தர்மஸித்தாந்த ஸபை 2வது கூட்டம்

சென்ற தைமீ 15உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேற்கண்ட சபையின் 2வது கூட்டம் சைதாப்பேட்டை பெருமாள் கோவில்தெரு ஸ்ரீ ராமானுஜ விஜய விலாசத்தில் நடைபெற்றது. அச்சமயம் ஷை பேட்டை பிரமுகர்கள் எல்லோரும் வந்து இருந்தார். கே. பார்தசாரதி அய்யங்கார் (ரிட்டைட் மேஸ்ட்ரிட்எட் கிளர்க்) ஆகுலமண்ணுடு வையாகரண பஞ்சானன வித்வான் உ. வே. ரா. பார்த்தசாரதி பட்டாசார்லு அவர்களை தலைமை வஹிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதை பாலு சாஸ்திரிகள் ஆமோதிக்க. பட்டசார்லு அக்கிராஸனம் வஹித்து கம்பீரமாக ஒரு பிரசங்கம் செய்தார்.

இச்சமயம் நாம் எல்லோரும் நமது மதம் எதுவாய் இருந்தாலும் ஈஸ்வர் ஒருவன் உண்டு. உலக விவகாரம் நடக்கிறது. அவன் அன்னியில் ஒரு காரியமும் நடக்கிறதில்லை. இனி நாம் மத விவகாரங்களில் சண்டை போடாமல் மஹா பிரளயமான இப்போது எந்த மதஸ்தரும் வித்தியாசம் பாராட்டாமல் நம் ஸனாதன மதத்திற்கு போராட வேண்டும் என்று சொன்னார். பிறகு, உடையாளூர் ராமாயணம் வித்வான் பிர்மஸ்ரீ அப்புசாமி சாஸ்திரிகள் "மதமும் நமது கடமையும்" என்னும் விஷயத்தை அழகாக உபந்யாஸம் செய்தார்.

பிறகு ஒ. சுதர்சன அய்யங்கார் பண்டிதர்களை சிலாகித்து டீசர் காலேஜ் தமிழ் பண்டிதர் இந்த பேட்டை வாசிகள் சார்பாகவும் இப்பண்டிதர்களுக்கு தாம் நன்றி செலுத்துவதாக சொன்னார். பிறகு ஓரகடம் பார்தசாரதி சத் வித்தியா பாடசாலை மாணவன் கடவுள் வணக்கம் பாட சபை இரவு 7 மணிக்கு முடிந்தது. காரியதரிசி

கும்பகோணம்

6வது ஆண்டு தனுர்மாஸ கிரிபஜனை பூர்த்தி தினம்

சோலையப்ப முதலியார் தெருவிலுள்ள ஆஸ்திக வாலிபர்கள் முயற்சியால் ஷை தெருவில் தனுர்மாஸ கிரிபஜனையானது வருடா வருடம் போல் பக்தி சிரத்தையாய் நடைபெற்றது. பிரமாதி ஞு தைமீ 9உ (22—1—40) சோமவாரத்தன்று ஷை பஜனை பூர்த்தியை முன்னிட்டு மாலை 5 மணிக்கு மேல் ஸ்ரீ விசாலாக்ஷி சமேத விஸ்வநாதஸ்வாமிக்கு விசேஷ அபிஷேக அலங்காரமும் ருத்ரபாராயணமும் இரவு 7 மணிக்கு பிர்மஸ்ரீ எஸ். வாதிராஜ பாகவதர் அவர்களால் "பார்வதி கல்யாணம்" என்ற கதா காலக்ஷேபமும் நடைபெற்றது. முடிவில் பெரியோர்கள் பலரால் ஆஸ்திக யுவர்களுக்கு ஆசி கூறப்பட்டு இரவு 11 மணிக்கு விநியோகம் நடந்தது.

ஆஸ்திக வாலிபர்கள்.

மதிப்புரை.

பரமார்த்த தீபமென்னும் ஸ்ரீ குரு ரமண வசனமாலா

இப்பெயருடைய ஓர் புத்தகம் புதுக்கோட்டை ஸ்ரீ லக்ஷ்மண சர்மாவால் எழுதப்பட்டுள்ளது. 343 சுலோகமடங்கியது ஸ்ரீ ரமண மகரிஷியினது வசனவுண்மையை விளக்குகின்றது. அவர்கள் 'உள்ளது நாற்பது' எனத் தமிழிலும் 'உபதேச ஸாரம்' என்று ஸம்ஸ்கிருதத்திலும் எழுதி வெளியிட்டுள்ளார். ஸ்ரீமான் சுப்ரமணிய அய்யர் என்னும் பெரியார் ஸ்ரீரமண மகரிஷி சன்னதி முறை என்று தமிழில் அதை விவரித்துள்ளார். அதினுண்மையையும் ஜோதிர் மயமாக விளங்கும் ஸ்ரீ அருணாசலத்தின் தத்துவத்தையும், அத்தியாத்துமமாக நிருபித்து ஸ்ரீ லக்ஷ்மண சர்மாவால் எழுதப்பட்டிருக்கும் இக்கிரந்தம் எனையோர்க்கும் நல்லபயனை அளிக்கத்தக்கது. சிற்சில விடங்களில் விருத்த பங்கத்தை கவனிக்காததுடன், முதற்பாதம் மூன்றும் பாதங்களின் இறுதியில் லாகவத்தைக் கவனியாது கௌரவமாகக் கருதியிள்ள கவியின் கருத்து ஆனந்த பரவசத்தை வெளிப்படுத்துகிறது. ஆனந்த களிப்புராகத்தில் குற்றெழுத்துக்களை நீட்டி வசித்தலும் பொருத்தமே, ஆதலால் ஷை நுலானது மாந்தரனைவருக்கும் அகங்காரத்தை அகற்ற வல்ல ஒரு பெரியஸாதனமாகும். இது மூன்று அத்தியாயங்களும் பல பிரகரணங்களுமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. செவ்வையான திருஷ்டாந்தங்களினால் வேதாந்தார்த்தங்களை விளக்கியிருக்கிறதென்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

ரங்கநாதன்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.)

கிடைக்குமிடம்:— பட்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,

கீழவிடையல், திருச்சிரை

&

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,

கும்பகோணம்

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,